
முரசொலி
ரோமாபுரிப்
பாண்டியன்



# மனிதனின் கதை

**பி. சி. கணேசன்**

## 36. கருத்துப் போராட்டம்

அன்புள்ள மாதவி,

பேகன் காலத்துக்குப்பின் புதிய சிந்தனை ஒரு நெருக்கடியான சூழ்நிலையை ஏற்படுத்தியது. முரண்பட்ட சக்திகளான புதுமையும் பழமையும் மோதிக் கொண்டன. மறுமலர்ச்சியின் விளைவாகக் கருத்துப் போராட்டமொன்றே துவங்கியது.

பேகனுக்குப் பின் ஒரு நூற்றாண்டு கழிந்தது! தேங்கிக் கிடந்த மனித சிந்தனையில் புதிய ஓட்டம் பிறந்தது. வேத நூல்களுக்கெல்லாம் மக்கள் விளக்கம் கோரினர். அறியாமை அகலவே எத்தர்களின் பாடு திண்டாட்டமாயிற்று. மத குருமார்களின் மகத்துவம் குறைந்தது. 'கடவுளின் ஆணைகளை' மனிதன் ஆராய ஆரம்பித்தான். தெய்வீகப் பித்தலாட்டங்கள், படித்த ஆராய்ச்சியாளர்களால் மக்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன. உலகியலில் ஆண்டவனின் மகத்துவம் குறைந்து மனிதனின் உரிமைகள் ஒப்புக் கொள்ளப்பட்டன! ஆனால் இந்த நிலை பிறப்பதற்காக மனித இரத்தம் ஆறாக ஓடியது; சிந்தனையாளர்கள் உயிருடன் கொளுத்தப்பட்டார்கள். தியாகச் சாம்பல் மேட்டின்மீது மனிதன் தன் உரிமைப் பயிரை வளர்த்தான். அப்படி வளர்த்தவர்களில் விக்லிஃப் (Wycliff), ஜான் ஹஸ் (John Huss) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

சிறந்த கல்விமானும் மதப் பிரச்சாரகருமான விக்லிஃப், கத்தோலிக்க மதக் கோட்பாடுகளை பகிரங்கமாகவே எதிர்த்தார். பாதிரிகளின் தவறுகளை மக்கள் உணர வேண்டுமென்ற எண்ணத்துடன் பைபிளின் முக்கிய பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மக்களைப் படிக்கச் செய்தார். 'மறுப்புக் கொள்கை'யை (Protestantanism) ஆரம்பித்து வைத்தவர்களில் அவரும் ஒருவர். பைபிலைப் படித்து அதில் காணப்படும் விஷயங்களுக்கு விளக்கம் சொல்லும் தகுதியும் உரிமையும் தங்களுக்கே உண்டென உபதேசித்த பாதிரிமார்கள் விக்லிஃப்பின் இந்தச் செயலைக் கண்டு வெகுண்டனர். பாதிரிகளின் விசாரணை மன்றத்தால் விக்லிஃப் சிறைப் படுத்தப்பட்டார். அக்காலத்தில் மதக் கோட்பாடுகளை மறுத்துரைப்போரை விசாரணை செய்வதற்கென்றே தனி மன்றங்கள் இருந்தன. அந்த மன்றத்திற்கு (The Inquisition) என்று பெயர்.

அதே காலத்தில் செக் நாட்டுப் பேராசிரியரும், விக்லிஃபின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவருமான ஜான்ஹஸ் மத விசாரணை மன்றத்தால் உயிருடன் கொளுத்தப்பட்டார். இப்படி ஐரோப்பா வெங்கும் எண்ணங்களை மாற்றிக்கொள்ள மறுத்ததற்காக எண்ணற்றோர் உயிருடன் கொளுத்தப்பட்டார்கள். அன்பையும் அறத்தையும் போதித்து, பாபிகளை ரட்சிப்பதற்காகச் சிலுவையிலே மரித்த ஏசுவின் சீடர்கள், கருத்து வேறுபாடு கொண்டவர்களை உயிருடன் கொளுத்திய கோரச் செயல் உலக வரலாற்றில் கறைபடிந்த ஏடாகவே இன்னும் காட்சியளிக்கிறது.

சீர்திருத்தக்காரர்களும் பழமை விரும்பியோரும் போராடிக் கொண்டிருந்த இக்காலத்தில் மதத்தில் மலிந்துவிட்ட ஊழல்களை உணர்ந்து, அவற்றைக் களைய வேறுவித நடவடிக்கைகளில் ஈடுபட்ட மித்வாதிகளும் இருந்தனர். சர் தாமஸ்மூர் (Sir Thomas More), எராஸ்மஸ் (Erasmus) போன்றவர்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்கள்.

சமையல்காரனின் மகனாகப் பிறந்து, நாடக அரங்கங்களிலே ஏவலாளியாகப் பணியாற்றி, அறிவாலும் ஆற்றலாலும் இங்கிலாந்தின் முதல் நீதிபதியாக உயர்ந்தவர் தாமஸ்மூர்! சட்டம் பயின்று பட்டம் பெற்றபின் இலக்கியத் துறையில் கவனத்தைச் செலுத்தினார். கவிதைகளும் இன்பியல் நாடகங்களும் அவர் சிந்தனையின் குழந்தைகளாகப் பிறந்தன. அவருடைய எழுத்தும் சிந்தனையும் ஐரோப்பியக் கல்வி மறுமலர்ச்சியின் விடிவெள்ளியாகப் போற்றப்படும் எராஸ்மஸ்ஸின் கவனத்தைக் கவர்ந்தன. எராஸ்மஸ்ஸின் நட்பு தாமஸ் மூருக்குக் கிடைத்தது.

இலக்கியத்தில் திளைத்த மூரின் சிந்தனை, மதத் துறையில் சிறிது காலம் ஈடுபட்டது. வேத நூல்களைக் கற்று அறிவை விரிவுபடுத்திக் கொண்டார். இறுதியில் அரசியல் அவரை இழுத்தது. பார்லிமெண்ட் அங்கத்தினரானார். கி. பி. 1515-ல், இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்த உல்ஸி (Wolsey), வியாபாரக் குழுவின் தலைவராக சர் தாமஸ் மூரை, ஃபிலாண்டர்சுக்கு (Flanders) அனுப்பி வைத்தார். கார்டினல் உல்ஸிதான் 'சமபலக் கொள்கை' (Balance of Power) என்ற தத்துவத்தை அரசியலில் வெகு சாதுரியமாகக் கையாண்டு, இங்கிலாந்தின் பலத்தை ஐரோப்பாவில் வளர்த்தவர். வியாபாரக்குழுவாகச் சென்ற மூர் கிடைத்த ஓய்வைப் பயன்படுத்திக்கொண்டு 'உட்டோப்பியா' (Utopia) என்ற ஒப்பற்ற கற்பனை நூலை எழுதினார். மனித சிந்தனையை வளர்த்த ஒரு சில நூல்களுள் ஒன்றாக இந்நூல் இன்றும் கருதப்படுகிறது.

'உட்டோப்பியா' காலத்தின் கோலத்தைக் கேலி செய்யும் கற்பனை நூல். ஒரு லட்சிய நாடு எப்படியிருக்க வேண்டுமென்று அது சித்தரிக்கிறது. பொதுவுடைமையே அந்நாட்டின் அரசியல் கொள்கை. உட்டோப்பியாவில் வாழும் மக்களுக்குக் குறித்த வேலை நேரம் உண்டு. ஓய்வு நேரத்தைக் கேளிக்கைகளிலும், கல்வி பயில்வதிலும் அம்மக்கள் செலவழிக்கின்றனர். எல்லோருக்கும் கட்டாயமான கல்வி உண்டு. பெண்களும் கல்வி கற்றேயாக வேண்டும். மத சுதந்திரம் அங்கே இருக்கிறது. மனிதப் பண்புடனே சட்டங்கள் இயற்றப்படுகின்றன. மருத்துவ வசதிகளும், சுகாதார வசதிகளும், இதர சமுதாயத் தேவைகளனைத்தும் அங்கே சரிவரக் கவனிக்கப்படுகின்றன.

இந்நூல் அளவிலாப் புகழை அவருக்கு சம்பாதித்துக் கொடுத்தது. சிறந்த சிந்தனையாளராக அவர் மதிக்கப்பட்டார். இங்கிலாந்து நாட்டையாண்ட எட்டாம் ஹென்றி மன்னனுக்கு அவர் நெருங்கிய நண்பராக விளங்கினார். தேம்ஸ் நதிக் கரையில் மன்னனும் அவரும் தோள் மேல் தோள் கைபோட்டுக் கொண்டு எத்தனையோ மாலைப் பொழுதுகளை உல்லாசமாகக் கழித்திருக்கிறார்கள். மூரின் நண்பரொருவர் அரசரோடு அவர் பூண்டுள்ள தோழமை பற்றிக் கேட்ட போது, "அதைப் பற்றிப் பெருமைப்பட ஒன்றுமில்லை; ஃபிரான்சிலுள்ள ஒரு கோட்டையைப் பிடிக்க என் தலை பணயமாக வேண்டுமென்றால், மறுகணமே தலை என் உடலில் தங்காது என்பது எனக்குத் தெரியும்!" என்றாராம் மூர். எட்டாம் ஹென்றியை அவர் அவ்வளவு சரியாகக் கணித்து வைத்திருந்தார் என்பதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சிகளே சிறந்த சான்றாகும்.

உல்ஸியின் சிபார்சின் பேரில் சபாநாயகராகவும் நீதிபதியாகவும் நியமிக்கப்பட்ட தாமஸ் மூர், ஹென்றி மன்னனின் திருமண விஷயத்தில் கருத்து வேற்றுமை தெரிவிக்கவே, லண்டன் கோட்டையில் (Tower of London) சிறை வைக்கப்பட்டார். சிறிது காலத்துக்குள்ளாகவே இராஜத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். சிறையிலிருக்கும் பொழுது தாடி வளர்த்துக் கொண்டிருந்த மூர், கொலைஞனின் கொடுவாள் கழுத்தில் விழப்போகும் சமயம் தாடியை மட்டும் தூக்கிப் பிடித்துக் கொண்டு, "ராஜத் துரோகக் குற்றம் நான்தான் செய்தேன்; என் தாடியல்ல! ஆகவே அதை வெட்ட வேண்டாம்!" என்று வேடிக்கையாகச் சொன்னாராம்.

தலைபறிபோகும் போதும் களத்தில் அவர் காட்டிய அமைதியும் நகைச்சுவை யுணர்ச்சியும் அவருடைய திண்ணிய உள்ளத்

[தொடர்ச்சி பக்கம்—10]

## சட்ட மன்றத்துச் சம்பவம்

இந்த நாட்டு ஏழைகளின் கும்பி எரிய—குடல் கருக— ஊட்டியில் உல்லாசத்தின் அணைப்பிலே கூடிக் கலந்தார்கள், ஊராள வந்தவர்கள்! தி. மு. கழகம் எதிர்த்தால் என்ன; எங்கள் தீர்மானம் தீய்ந்தா போய்விடும்—என்று கேட்கிறது, அவர்களது பத்து நாட்களின் 'பகட்டான' வாழ்க்கை!

15 உறுப்பினர்கள்தான் செல்லவில்லை; 206—பேர்களில் மீதியுள்ள அத்தனை பேரும் சென்றார்களா?

அந்தோ பரிதாபம்! எஞ்சியுள்ள 191-ல் சட்டசபை துவக்க நாளில் வந்தவர்கள் 90 பேர்தான்! என்ன காரணமோ — இடக் கோளாறோ — அல்லது கால நிலைக் கோளாறோ — 100 பேரைக் காணோம்! ஏன்; காங்கிரஸ்காரர்களிலேயே 60 பேரைக் காணோமே!

★ ★ ★

அங்கேதான் கேள்வி பதில் நேரத்தில்........

கேள்வி: தமிழ் நாட்டில் பர்மிட் பெற்று குடிப்பவர்கள் எத்தனை பேர்?

பதில்: 6538 பேர்!

கேள்வி: இனி குடிப்பதற்கு பர்மிட் அதிகம் வழங்கப்படுமா?

பதில்: நீலகிரிவாசிகள் இன்ப வாழ்க்கை அனுபவிப்பதற்கு பர்மிட்டுகளை அதிகரிக்க வேண்டுமென்ற அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை!

கடைசிக் கேள்வியைக் கேட்டவர் காங்கிரஸ் உறுப்பினர்; பதில் அளித்தவர் கனம் பக்தவத்சலம்!

★ ★ ★

இந்த வினாவிடைக்கு இப்படிப் பொருள் பிரிக்கிறான், நம் அலுவலகப் பையன்!

நீலகிரி வாசிகள் இன்ப வாழ்க்கை அனுபவிக்கிறார்கள்; அப்படியானால் அந்தப் பட்டியலில் இப்போது நம் ஆளவந்தார்களும் சிக்குகிறார்கள்! அவர்களுக்காகத்தான் அதிக பர்மிட் வழங்கப்படுமா—என்று நினைக்கிறாரோ காங்கிரஸ் உறுப்பினர்.

இருக்கலாம்; இருக்கலாம்!

காந்தியாரின் பதினோரு 'பிரம்மச்சரிய' விரதங்களைக் கூறும் சுலோகங்களில் ஒன்றான 'கள்ளுண்ணாமை' இன்னும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது, வார்தாவில்!

ஆனால் அந்தக் காந்தியாரின் வழிவந்த சீடகோடிகள் 6538 பேரைக் குடிக்கச் சொல்லுகிறார்கள்! இன்னும் கூட்ட முடியுமா இந்தத் தொகையை—என்றும் குரல் எழுப்புகிறார்கள்!




வெள்ளி 8—5—59 சென்னை

# சாதுக்களிடம் சரண்!

மக்களின் சக்திக்கு மதிப்பளிக்க விரும்பாத எத்தனையோ மன்னாதி மன்னர்கள், மத போதகர்களின் பெட்டிப் பாம்பாய் — அவர்களது குட்டுக்குக் குனியும் அடிமைப் பண்பினராய் வாழ்ந்திருக்கிறார்கள், ஒரு காலத்தில்!

கமண்டலமேந்திகளுக்குக் கைலாகு கொடுத்த கரங்கள் — கண்ணீர்க் கடலிலே தத்தளித்துக் கொண்டிருந்த மனிதப் பிறவிகளைத் தூக்கிவிட்டது கிடையாது; மாறாக தலைதூக்கவிடாது அழுத்திக் கொன்ற சம்பவங்கள் வரலாற்றிலே ஏராளமாகக் காணப்படுகின்றன!

சாணிக்குப் பொட்டிட்டு சாமியென்று கும்பிடச் சொன்னவர்கள்—கோவில், குளம் காட்டி நாவில் நுழையாத மந்திரம் ஜெபித்தவர்கள்—சாவில் காட்டுகிறேனப்பா சொர்க்கத்தை என்று கண்கட்டி வித்தை காட்டியவர்கள்—தங்கள் வாழ்விலே மட்டும் வளம் கண்ட கதைகள் இன்று கேலிக்குரியனவாகிவிட்டன!

பகவான் நாமத்தை உச்சரிக்கிறாயா? நீ பகுத்தறிவுக்குக் குழி வெட்டுகின்ற சமுதாயத் துரோகி!

சாத்திரம் சொல்லுகிறாயா? சூத்திரன் என்று தூற்றுகிறாயா? அத்தனையும் சூதென்று புரிந்து கொண்டோம்; தீதென்று உணர்ந்து கொண்டோம்!

—அறியாமை நிலத்திலே ஆசார விதை தூவி, சுந்தர வாழ்வை அறுவடை செய்து வந்தவர்கள், இப்படித் தூற்றப்படுகிறார்கள் இன்று, சுயமரியாதைப் பண்பு சுடர்விட்டுப் பிரகாசிக்கின்ற காரணத்தால்!

மதமென்ற மதுகுடித்து வெறிபிடித்து ஆடியவர்கள், இன்று மனம் மாறி வருகிறார்கள்! பூணூலை அறுத்தெறிந்து புரோகிதத்தை வெறுத்தொதுக்கி, அறிவியக்கத்தை அண்டி விட்டவர்கள் இன்று ஏராளம்!

ஒன்றே குலமென்ற வாதமே இன்று குன்றின் மீதிட்ட விளக்காகப் பரவிக் கொண்டிருக்கிறது!

நாட்டின் நிலை இப்படியிருக்க, மதச் சார்பற்றது எமது அரசு என்று மார்தட்டுகின்ற இந்தியத் துணைக் கண்டத்தின் 'தூண்'களுடைய கதையென்ன இன்று?

பார்மெச்சும் பாரதத்தின் தலைவர் ராசேந்திர பிரசாத் பண்டாரங்களின் பாதம் கழுவினார், ஒரு நாள்! பாடையிலே செல்லுகின்ற பிணங்களுக்குக்கூட ஆடையுண்டு; ஆனால் நாகரிகத்தின் வாடை படாத காண்டுமிராண்டிகள்போல் நடைபோட்டு வந்த நிர்வாணச் சாமியார்களை நேத்திரங்கள் விரியக் கண்டு களித்தார் கும்பமேளக் காவலராம் பண்டிதர், ஒரு சமயம்!

இவை மட்டுமேல்ல; இன்று அந்த இருபெருந் தலைகளும் சாதுக்களின் கையில்தான் இந்த நாடே இருக்கிறது என்கிற பாணியில் பேசியிருக்கிற செய்தியறிந்து பகுத்தறிவுவாதிகள் வேதனைப்படுகிறார்கள்.

ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் புதுடேல்லியிலே பாரத சாது சமாஜத்தினர் புதிய கட்டிடம் ஒன்றைக் கட்ட இருக்கிறார்கள்; அந்தக் கட்டிடத்திற்கு அடிக் கல் நாட்டுவதற்கு பிரமுகர் ஒருவரைத் தேடியலைந்திருக்கிறார்கள், அவர்கள். இறுதியில் மதச் சார்பற்ற நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்டு வருகின்ற ராசேந்திரர்தான் கிடைத்தாராம்.

இந்தோனேஷியாவிலே இந்தியாவின் பெருமைபாடச் சென்றவர் — வியட்னாமிலே சீரோடும் சிறப்போடும் உலா வந்த இந்நாட்டின் தலைவர்—மஞ்சள் உடை தரித்த ஆயிரக் கணக்கான சாதுக்களுக்கு மத்தியிலே அழைத்து வரப்பட்டார்!

அவர் எடின்பரோ கோமகனுக்கு மாலையிட்டிருக்கிறார்; குருஷேவின் கையைக் குலுக்கியிருக்கிறார்; இத்தனைக்கும் மேலாக படை நடக்க திசை காட்டும் சக்தி படைத்தது அவரது கரம். அந்தக் கரம்தான் ஆண்டிகளின் அரண்மனைக்கு அஸ்திவாரக் கல் நாட்டியிருக்கிறது! அப்போதுதான் அவர் கீழே கண்டபடி பேசியிருக்கிறார்:

"மக்களிடையே தொடர்பு கொண்ட நீங்கள் நாட்டை உருவாக்கும் நல்ல பணியிலே ஈடுபட வேண்டும்!

"பழங்காலத்திலிருந்து கோயில்களும், மதத் தலங்களும் கல்விக்கு இருப்பிடங்களாகத் திகழ்ந்தன. ஆகவே உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்; நாட்டு மக்களிடையே கல்வி அறிவைப் பரப்பப் பாடுபடுங்கள்!

"பொய், கள்ள மார்க்கெட், லஞ்ச ஊழல்கள் ஆகியவைகளை சமுதாயத்திலிருந்து விரட்ட உங்களால் முடியும்!

"கிராமங்களில் வாழுகின்ற 70 சதவீத மக்களின் வறுமையை— அறியாமையைப் போக்க நீங்கள் என்றும் உழைக்க வேண்டும்!'

—இப்படி ஆணையிடவில்லை; அடிபணிந்து கேட்கும் முறையிலே பேசியிருக்கிறார், ராசேந்திரர்!

பார் சுற்றிய மேதைகளிடமோ—பட்டம் பெற்ற வாலிபர்களிடமோ அல்ல அவர் வேண்டியிருப்பது; இந்த நாட்டு சாதுக்களிடம்!

அவர் மட்டுமேல்ல; பஞ்சசீலம் போதித்துப் பார்புகழ் பெற்ற நேரு பண்டிதர்கூட அந்த சாதுக்களின் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார். மந்திரம் உச்சரித்துக்கொண்டே மந்திரியாரை வரவேற்ற அந்த சாதுக்களிடம் அவரும் கேட்டுக் கொண்டாராம், நாட்டின் ஐக்கியத்தை வளர்க்கப் பாடுபட வேண்டுமென்று.

" சாதுக்களின் வாழ்க்கை களங்கமற்றதாகும். ஆகவே அவர்கள் மதத்தில் சகிப்புத்தன்மை காட்டும்படியும், மக்கள் ஒன்றுபட்டு உழைக்குமாறும் பிரச்சாரம் செய்தால், அதனால் மகத்தான விளைவுகள் உண்டாகும்!"

—நாட்டின் ஐக்கியத்திற்கும், மகத்தான விளைவுகளுக்கும், தர்ப்பையைக் காட்டித் தொப்பையைக் கழுவுவோரை நம்புகிறார், பண்டிதர்!

சாத்திரத்திலே எனக்கில்லை நம்பிக்கை என்றார் ஒரு காலத்தில்; மதத்துறை ஈடுபாடு மக்களின் அறிவுக் கண்களுக்குத் திரையிட்டு விடும் என்று முழங்கினார். அவரது முற்போக்கு எண்ணம் கண்டு மூக்கில் விரல் வைத்தவர்கள் அநேகர்!

ஆனால் இன்று, ஆண்டவனின் தூதவர்களே! உங்களிடம்தான் இந்த நாட்டின் எதிர்காலம் இருக்கிறது—என்று அடிதொழுது பணியும் நிலைக்குச் சென்றிருக்கிறார்.

வளர்ந்துவரும் பகுத்தறிவுச் சமுதாயத்திலே இத்தகைய பத்தாம் பசலிக் கொள்கைகள் இன்னும் வாழலாமா? எதையும் செய்து முடிக்கும் சக்தி படைத்த வல்லவர்கள் இப்படி சாதுக்களிடம் சரண் அடைவது அவசியம்தானா?

கல்வி அறிவு பரப்ப சாதுக்களைத் தேடுகிறார்கள். எழுத்தறிவிக்கும் நேரத்தில் இறைவனாரின் திருப் பெயரையும், திருவிளையாடல்களையும் போதித்து பக்தி மார்க்கத்திற்கு இந்த நாட்டுப் பாலகர்களை அழைத்துச் செல்லவேண்டுமென்று விரும்புகிறார்கள் போலும்.

தலைவிரித்தாடும் இலஞ்ச ஊழலை ஒழிக்க சாதுக்களால் முடியும் என்கிறார்கள். லஞ்சம் மட்டுமேல்ல; அதனினும் கொடிய துரோகங்களை ஒழிக்க சட்டத்தைக் கையிலே வைத்திருப்பவர்கள், திருநீறு பூசிகளின் தயவை நாடும் கேவலத்தை என்னவென்று சொல்வது?

நாட்டின் ஐக்கியத்தை சாதுக்கள் ஏற்படுத்த முடியும் என்கிறார் பண்டிதர். மதவெறியால் மதம் கொண்ட யானைகளாய் நடமாடியவர்கள், எந்த மதம் உயர்ந்த மதம் என்று கத்தி எடுத்துக் களம் புகுந்து போராடிய சம்பவங்களை அவர் மறந்திருக்க முடியாது. இந்தப் பன்னெடுங்காலப் போராட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அந்த வேலையற்றவர்கள், எண்ணத் தொலையா மதங்களை நம்பி—மதத் தலைவர்களின் பிடியில் சிக்கிக் கிடக்கின்ற மக்களை ஒற்றுமைப் படுத்த முடியுமா?

சாதுக்களிடம் சரண் அடைந்த பண்டிதரும், பாரதத் தலைவரும் தங்களுடைய கௌரவத்தை மட்டும் கெடுத்துக் கொள்ளவில்லை; அந்தோ பரிதாபம்; இந்த நாட்டின் மானத்தையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்கள்!

## மேயரும் மறுத்தார்!

'ஆகாஷ்வாணி'யை வெறுத்து ஒதுக்கியவர்களின் பட்டியலில், இப்போது சென்னையின் நகரத் தந்தை அ. பொ. அரசும் இடம்பெறுகிறார்.

"தமிழ் நாட்டின் தலைநகராகிய சென்னை மாநகராட்சி மன்றத்தின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நான், தமிழர் பெருமையையும், விருப்பத்தையும் காக்கத் துணை நிற்க வேண்டும்!"

— என்று துவங்கி, பேசுவதற்கு அழைப்பு விடுத்த வானொலி நிலையத்தாருக்கு தன்னுடைய மறுப்பைத் தெரிவித்து விட்டார் அவர்.

தமிழ் காக்கும் பெரும் படையில் தலை நிமிர்ந்து நிற்கும் அவரது செயலுக்கு 'தமிழகம்' நன்றி செலுத்துகிறது; நாம் பாராட்டுகிறோம்.

## நூலேணி

[நூலேணிக்குப் புத்தகங்கள் அனுப்புபவர்கள் இரண்டு படிகள் அனுப்ப வேண்டுகிறோம்.]

### நாரதர்

ஆசிரியர்: சீனிவாசராவ்

● இருபத்தைந்து ஆண்டு காலம் பத்திரிகைத் துறையிலே உழன்று அனுபவப்பட்ட சீனிவாச ராவின் முயற்சியில் மாதமிருமுறை ஏடாக 'நாரதர்' வருகிறது. முதல் இதழில் கலையுலகச் செய்திகளும், நிகழ்ச்சிப் படங்களும் நிறைந்து காணப்படுகின்றன. போற்றுதற்குரிய முயற்சிதான். என்றாலும், ஏட்டின் இறுதிப் பக்கத்தை மட்டும் வரவேற்க முடியவில்லை. பிரவேசக் கட்டணம் வைத்து, குறுக்கெழுத்துப் போட்டி துவங்கியிருக்கிருர்கள். சிந்திக்கும் அறிவை சூதாட்டத்திற்குப் பயன்படுத்தும் முறை ஒழிந்து வருகிற நேரத்தில், அதற்கு 'இலக்கியக் களஞ்சியம்'என்றும் பெயர் கொடுத்திருப்பது விந்தையே!

[முகவரி: 'நாரதர்', 77, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, சென்னை—2. விலை: தனி இதழ்: 20 காசுகள்.]

### தமிழ்நாட்டுப் போர்க்களங்கள்

எழுதியவர் : வித்துவான் ஐயம்பெருமாள்கோனுர்

● பள்ளி மாணவர்களுக்கேற்ற தமிழ் நடையில், வெண்ணிப் போரிலிருந்து பாஞ்சாலங் குறிச்சிப் போர்வரை நிகழ்ந்த வீரப் போர்க்களங்களைப் படம் பிடித்துக் காட்டுகிருர், ஆசிரியர். சுவைபடச் சொல்லும் ஆற்றல் ஆங்காங்கு மின்னலெனப் பளிச்சிடுகிறது.

சேரன் செங்குட்டுவனின் பொது நலப் போர்கள் நமக்கு உவகை யளிப்பதானுலும், உள்ளங்கை நெல்லிக் கனியளவேயுள்ள தமிழ் நாட்டில் போட்டியும் பொருமையும் பூசலும் தோன்றிய காரணத்தால் வந்தவர் நுழையவும், நுழைந்தவர் அரியணை ஏறவுமான நிலை ஏற்பட்டது என்பதை உணர்ந்து பார்த்து வேதனையுறவும் செய்கிருேம்.

இந்த வேதனை தரும் தமிழ் நாட்டுக் கதைக் கொத்தைப்பற்றிய விளக்கமோ விரிவுரையோ இல்லாது வெறும் பொழிப்புரையாகவே வடித்துள்ளார், ஐயம்பெருமாள் கோனுர்! தமிழகத்துப் போர்க் களங்களைப்பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள விரும்புவோருக்கு ஏமாற்றம் தரும் வண்ணம் — ஆனல் பள்ளிப் பிள்ளைகள் படிப்பதற்கேற்ற வகையில் இச் சிறுநூல் அமைந்திருக்கிறது. தமிழ்ப் பேராசிரியரான இவர் எழுதிய நூலில், எழுத்துப் பிழைகள் ஒன்றிரண்டு இருந்தாலும் தமிழ் நடை ஆற்றொழுக்காக இருக்கிற காரணத்தால் பள்ளிப் பிள்ளைகளின் பாடப் புத்தகமாயிருக்கும் இடத்தைப் பிடிக்கும் தகுதியை இந்நூல் பெற்றிருக்கிறது.

[கிடைக்குமிடம் : ராஜா பப்ளிகேஷன்ஸ், தெப்பக்குளம், திருச்சி. விலை: ரூபாய் 1—50. பக்கங்கள்: 114]

# வடக்கே போன பிரேதமனிதன் வருகிருன்; வருகிருன்!

"ஈரலில் அடி!"

"குடல் கிழிந்திருக்கிறது!"

"இதயத்தையே காணேம்!"

"எலும்பு நொறுங்கி விட்டது!"

—இப்படித் தீர்ப்புக் கூறிக் கொண்டு வந்த அந்த டாக்டர், மீசையை முறுக்கிக் கொண்டே......"ஆ, இவன் என் புழையகால நண்பன். பெயர் காங்கிரஸ்! ஆனல் இப்போது சமூகத் துரோகி. அன்று வேண்டாதன புரிந்தான்; இன்று வேதனையின் எல்லையை மிதித்து விட்டுச் செத்திருக்கிருன். ஆனுலும் இவனை அடித்து வீழ்த்தியவன் தன் சொந்தக் கையாலேயே அடித்து வீழ்த்தியதாகக் கூறுகிருன். பொய்! அது சுத்தப் பொய்! இந்தப் பிரேத மனிதனும் காங்கிரஸ் தன் வெறுப்புகளுக்கே களபலியாகச் செத்திருக்கிருன். என்னுடைய ஆதர்ச உதையினுல்தான் இவனுடைய ஆவி போயிருக்கிறது. இவனை அடித்து வீழ்த்தியதாகக் கூறுகிருனே, 'கழகம்' அவன் கூறுவது பொய்; முழுப் பொய்!"

—என்று தன் பிரேத விசாரணையை முடித்துக் கொண்டார் அந்த டாக்டர்.

[தேர்தலில் அடிபட்ட காங்கிரசின் பிரேதத்தைப் பரிசீலிக்கும் இந்த டாக்டர் வேறு யாருமில்லை. சிவஞான(கிராமணியார்)தான் ! அரசியல் சந்தையில் பொழுது போன நேரத்தில் ஊசி பாசி விற்கும் விநோத உருவமாக தமிழகத்தார் கண்களுக்குப் படுகின்ற தமிழரசுக் கழகத் தலைவர்தான். "திராவிட நாட்டுப் பிரச்னையை வைத்து நகர சபைத் தேர்தலில் ஈடுபடுவீர்களா?" என்று 'பொருத்தமில்லா அறைகூவல்' விடுவதும், நகர சபைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றியைப் பெற்ற பிறகு "இவர்கள் பெற்ற வெற்றி திராவிட நாட்டுப் பிரச்னையின்மேல் கிடைத்த வெற்றியல்ல" என்று தான் முன்பு சொன்ன 'பொருத்தமில்லா அறைகூவலுக்கு' ஆதாரம் தேடுவதுமே தொழிலாகக் கொண்டு அரசியல் உலகில் 'கிராக்கியோ' 'கைராசியோ' இல்லாத 'அப்பாவி டாக்டர்' இவர்.]

★

அடுத்து, காங்கிரஸ் பிரேதத்தைப் பார்க்க ஓடோடி வந்தார், இன்னொரு டாக்டர்!

வாயைத் திறந்து வடக்கு நோக்கிக் கால்களை நீட்டிவிட்ட காங்கிரஸ் பிரேதத்தை உற்றுப் பார்த்தார். கண் கலங்கியது. என்றாலும் மனந்தளரவில்லை.

"எவன் சொன்னன் என்னருமைக் காங்கிரஸ் செத்துவிட்டதாக? கையைத் தொட்டுப் பாருங்கள், மகிழ்ச்சியில் அவனுடைய கை 'ஜில்'லென்று குளிர்ந்து போயிருப்பதை! "எனக்கு இவ்வளவு பெரிய வெற்றியா?" — என்று ஆச்சரியத்தால் வாயைத் திறந்து கொண்டிருக்கும் நேர்த்தியைப் பாருங்கள், என்னுடைய காங்கிரசை அடித்த கழகத்திற்கு ஒரு காயம் ஏற்படுத்திவிட்டோம் எனத் தெரியாமல் பேசுகிருர்கள்! விஷயம் தெரியாதவர்கள்! காங்கிரஸ் சாகவில்லை......சாகவில்லை...ஆயிரம் கோவிலில் சத்தியம்செய்வேன், காங்கிரஸ் சாகவில்லை!"

—கோபாவேசமாகப் பேசினுர் அந்த டாக்டர்.

[இந்த 'அதிமேதாவிலாசம்' பொருந்திய டாக்டர் வேறு யாருமில்லை. திருமங்கலம் ராஜாராம்தான்!

மேலிடத்திற்கு விசுவாசமாக இருக்க, 'கருங் காக்கையை வெள்ளைக் காக்கை என்று கூறவும், ஆற்றில் கல் மிதக்கக் கண்டேன்' என்று கூறுவதற்கும் துளியும் அஞ்சாத 'விசுவாசமுள்ள' தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்!]

★

உடனே பிரேதத்தை ஹெட் சர்ஜனிடம் கொண்டு வரும்படி தந்தி வந்தது. ராஜாராம் பிரேதத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினுர். ஹெட் சர்ஜன் மிஸர்ஸ் இந்திரா காந்தி பிரேதத்தை நன்கு பரிசோதித்தார்.

"நல்ல அடி! பிழைப்பது கஷ்டம் தான். இவன் செத்த காரணம் இவனுடைய கெட்ட நடத்தைதான்!"

—என்ருர் இந்திரா.

"அப்படிச் சொல்லாதீர்கள் மேடம்! இவன் நம் சொந்தக்காரன். நம் இலாகாவில் வேலை செய்பவன்."

—என்று சொந்தத்தை விளக்கினுர் ராஜாராம்!

"அதனுலென்ன ?.........ஆமாம் இவனை அடித்து வீழ்த்தியது யார்?"

"கழகம்"

—குறிப்பெடுத்துக் கொண்டார் திருமதி இந்திரா.

"ஆமாம், கடைசி அடி விழும் போது நம் கம்யூனிஸ்ட்டுகளும் அடிப்பதற்கு உதவியாயிருந்தார்களாமே! அதை நீங்கள் ஏன் கண்டித்திருக்கக் கூடாது? ஏதோ சம்பளத்தை வாங்கிக் கொண்டு சும்மா திரிந்தால் எப்படி? எல்லாப் பிரச்னைகளைப்பற்றியும் பேச வேண்டுமய்யா"

"முடியவில்லையே! எதிர்க்கட்சி ஆள்வதற்கு வசதியளிக்கிருேம் என்று கூறி சதி செய்து விட்டார்கள், தோழர்கள்!"

"இருக்கட்டும்! இருக்கட்டும்! 'தேசீயம்' பேசிக்கொண்டே எப்படி இவர்கள் நாட்டைச் சீர்குலைக்கும் கட்சியுடன் சேரலாம்?"

—என்று கூறினுர் இந்திரா காந்தி.

"நாம் ஒரிஸ்ஸாவில் பழைய ராஜாக்கள் கட்சியான கணதந்திரப் பரிஷத்துடன் சேரவில்லையா...?"

—என்று முணுமுணுத்தார் ராஜாராம்.

இந்திரா காந்தி திரும்பி நின்று ராஜாராமை எரிப்பது போல் பார்த்தார்!

ராஜாராம் அசட்டுச் சிரிப்பு சிரித்தார்!

★

காங்கிரஸ் பிரேதத்தை ஊட்டிக்குக் கொண்டுவரச் சொல்லி அவசரத் தந்தி வந்தது!

உடனே பிரேதத்தைத் தூக்கிக் கொண்டு ஊட்டிக்குப் போனுர் ராஜாராம்.

அப்போதுதான் மேயர் தேர்தலின் முடிவைக் கேட்டுக் கதிகலங்கிப் போயிருந்தார்கள், அமைச்சர்கள்! ஊட்டிக்கருகில் கவிழ்ந்து விட்ட ஒரு மோட்டார் வாகனத்தைப் பார்வையிட்டுத் திரும்பி வந்த அவர்களுக்குத் தங்களுடைய காங்கிரஸ் வாகனமும் கவிழ்ந்து விடுமோ என்ற அச்சம் அவர்களின் உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்தது.

கனம் காமராசர் தலைமை தாங்க காங்கிரஸ் பிரேதத்தைச் சுற்றியும் உட்கார்ந்து கொண்டு மந்திரிகள் பிரேத விசாரணை நடத்தினுர்கள். கடைசியில் காமராசர் எழுந்திருந்தார்.

"ஆமய்யா! இவன் நல்லவனுயிருந்தா ஏய்யா 'அவா' உதைக்கிரு? எல்லாத்துக்கும் நல்லவாளாயிருந்தா ஏன் இந்தமாதிரி வருது? முதலில் இப்பேர்ப்பட்டவனை நாம் வேலைக்குவைச்சுக்கப்படாது!',

காமராசர் வெளிப்படையாகவே பேசினுர். மற்றவர்கள் திகைத்துப் போனுர்கள், செத்தவன் மேலேயே எல்லாப் பாரத்தையும் போட்டுவிடும் அவருடைய திறனைக் கண்டு!

★

டில்லிக்குப் பிரேதத்தை எடுத்துக் கொண்டு வரும்படி பண்டித நேருவிடமிருந்து ஒரு அவசர 'டிரங்க்கால்' வந்தது.

உடனே பிரேதம் பார்சலில் அனுப்பப்பட்டது. கையைத் தொட்டுப் பார்த்தார்; பிரதமர்! காலைத் தொட்டுப் பார்த்தார்!

"ஓகே! இவன் நன்ருகத்தானே இருக்கிருன். இந்த வட்டாரத்திலிருக்கும் காங்கிரசைவிட இவன் எவ்வளவோ தேவலையே! உத்திர பிரதேஷ் காங்கிரஸைவிட, பம்பாய் மாநிலக் காங்கிரஸைவிட இவன் ஆயிரம் மடங்கு தேவலையே! நீ ஒன்றும் செத்துவிடவில்லை திரும்பிப் போகலாம்."

—என்று நற்சாட்சிப் பத்திரம் கொடுத்தனுப்பினுர் நேருபிரான்.

சிவஞானத்தின் முறையான 'தேசீயத் தமிழக' விசாரணையில், இந்திரா காந்தியின் 'தலைமைப் பீட' விசாரணையில், காமராசரின் 'ஊட்டி' விசாரணையில் இறந்துவிட்டதாக முடிவு செய்யப்பட்டு பார்சலில் டில்லி சென்ற தமிழகத்துக் காங்கிரஸ் பிரேதம், பண்டிதரின் வாய் மொழியைக் கேட்டபின் முதற் வகுப்பில் இப்போது சென்னையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. ⁂

## தொழில் துறையில் துரோகம்!

சின்னஞ்சிறு மலர்! ஆனால், அந்த மலர்தான் மனிதகுலத்தின் மானங்காக்க பருத்தியைத் தருகின்றது. பருத்தியைப் போல வேறொரு வியாபாரப் பொருள் உலகில் வரலாற்றை உருவாக்கும் சக்தியைப் பெற்றதில்லை.

தென் அமெரிக்காவில் பருத்தித் தோட்டங்களில் மிக அதிக அளவில் வேலைசெய்து கொண்டிருந்த அடிமைகளை விடுதலை செய்ய மறுத்ததின் விளைவாகவே கடுமையான உள்நாட்டுப் போரை அங்கு ஆப்ரகாம்லிங்கன் நடத்தவேண்டிய நிலைமை அமெரிக்காவில் ஏற்பட்டது. சக்தியற்ற — வலிவு குன்றியிருந்த இங்கிலாந்தை செல்வங் கொழிக்கின்ற தொழிற் சிறப்பு மிக்க நாடாக மலர்வித்தது பருத்தி ஆலைத் தொழில்தான்!

# பஞ்சாலையிலும் வடக்கரின் வஞ்சகம் கொஞ்சமா?

★ ★

**சி. ஜம்பு**

இன்றைக்கு விவசாய, வியாபார, தொழில், சமுதாய ரீதியாக பருத்திக்கு உலகில் அதிக முக்கியத்வம் உண்டு. இந்திய உபகண்டத்தைப் பொறுத்த அளவில், பருத்தி ஆலைத் தொழில் மிகமிகச் சக்தி வாய்ந்த பெருந்தொழிலாக விளங்குகின்றது. இந்தியா, இங்கிலாந்து, ஜப்பான், சீன ஆகிய நாடுகளுக்கிடையே துணி விற்பனைக்கான சந்தைகள் பிடிப்பதில் பலத்த போட்டி ஏற்பட்டு, வாணிகத் தொடர்பில் ஒருவித அருவருப்பும் நிகழ்ந்துள்ளது. உலக ரீதியில் சில வாணிக நெருக்கடிகள்கூட உண்டாகியுள்ளன.

பட்டாடைகளுக்கும், பஞ்சிலாடைகளுக்கும் பழஞ் சிறப்பு பெற்றது தமிழகம்! ரோம், கிரேக்கம், எகிப்து போன்ற நாடுகளுக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மெல்லிய துணிகளை ஏற்றுமதி செய்து, தமிழ்நாடு சிறந்த முறையில் வாணிபம் நடாத்தியிருக்கிறது.

பருத்தி நன்கு விளைவதற்கேற்ற மண்வளமும், தட்பவெட்ப நிலையும் நம் திராவிடத்தில் மிகப் பொருத்தமாய் அமைந்திருக்கின்றன. ஆனால், திராவிட மாநிலங்களின் அரசினர் இத்துறையில் தகுந்த கவனம் செலுத்தாத காரணத்தினால் பருத்தி விளைவில் தென்னகம் பின்தங்கியதாக வாழ்கின்றது. ஆனால் வடநாட்டு மாநிலங்களோ, உணவு உற்பத்தியில் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு, பருத்திச் சாகுபடியில் அதிக அக்கறை செலுத்தியதன் காரணமாக பருத்தி விளைச்சலில் முன்னணியில் நிற்கின்றன. எனவே, திராவிடம் தொழில் துறையில் முன்னேறுவதற்கான முயற்சிகளில் சிறப்பாக ஈடுபட வேண்டும்.

இன்றையத் தினம் மிகப்பெரும்பாலான பருத்தி ஆலைகள் வட மாநிலங்களில் — குறிப்பாக பம்பாய் ராஜ்யத்தில் குவிந்து கிடக்கின்றன. பொதுவாக, வட நாட்டில் இருக்கும் பருத்தி ஆலைகள் பெரியனவாகவும், தென்னாட்டில் இருக்கின்ற பருத்தி ஆலைகள் சிறியனவாகவும் விளங்குகின்றன. 1956-ம் ஆண்டுத் துவக்கத்தில் பருத்தி ஆலைகளின் மாநில ரீதியான நிலவரம் கீழே தரப்படுகின்றது.

அந்த விவரத்திலிருந்து கணக்கிட்டால், வட நாட்டில் நூற்பு ஆலைகள் 45 இருக்க, திராவிடத்தில் 76 இருப்பதை அறியலாம். ஆனால், நூற்பும் நெசவும் கூட்டு பருத்தி ஆலைகள் வட நாட்டில் 247 இருக்க தென்னாட்டில் 44 தான் இருக்கின்றன.

தென்னாட்டில் உள்ள நூற்பு ஆலைகளின் எண்ணிக்கை அதிகமாயிருப்பினும், அவைகள் சிறிய ஆலைகளாகும். வடநாட்டிலுள்ள நூற்பாலைகள் எண்ணிக்கையில் குறைவாயிருந்தாலும், அவைகள் பெரிய ஆலைகளாகும்.

ஆலைகளின் எண்ணிக்கை எவ்வாறு இருப்பினும், அவைகளில் உள்ள கதிர்களும் தறிகளுமே உற்பத்தி அளவை நிர்ணயிக்க அடிப்படையான அளவுகோலாய் அமையும். இந்த நிலைமைப்படி ஆராய்ந்தால் தென்னகத்து ஆலைகளில் 28, 95, 696 கதிர்கள் இருப்பதும், வடநாட்டு ஆலைகளில் 91, 55, 513 கதிர்கள் இருப்பதும் நம் கவனத்துக்குரியவை. எனவே, நூல் நூற்பைப் பொறுத்த மட்டில் தென்னகம் தனக்குரிய நியாயமான பங்கைப் பெற்றிருக்கின்றது.

இதை மட்டில் மனதில் கொண்டு, தென்னாடு பஞ்சாலைத் தொழிலில் உரிய அளவில் முறையாக வளர்ந்திருக்கிறது எனக் கணக்கிட முடியாது. ஆயினும் நூற்பும் நெசவும் ஒருங்கே நடைபெறுகின்ற கூட்டு பருத்தி ஆலைகளினுடைய நிலைமையையும் ஆராய்ந்தால் திராவிடத்தின் படுமோசமான நிலைமை தெளிவாய்ப் புலப்படும்.

வட நாட்டில் 247 கூட்டு பருத்தி ஆலைகள் இருக்கின்றன. தென்னகத்திலோ 44 ஆலைகள் மட்டிலுமே உள்ளன. ஆறிலே ஒரு பங்குதான் தென்னாட்டிற்கு! என்ன பரிதாபகரமான நிலைமை!

இந்த வேதனையான நிலைமையோடு தறிகளின் நிலவரத்தையும் கவனிப்போம். வடநாட்டில் 1,85,311 தறிகளும், தென்னாட்டில் 17,590 தறிகளும் உள்ளன. 11 மடங்கு தறிகள் வட நாட்டில் இருக்கின்றன, தென்னகத்தைக் காட்டிலும்!

ஆலைகளின் எண்ணிக்கைப்படி ஆறில் ஒரு பங்கும், தறிகளின் கணக்குப்படி பதினொன்றில் ஒரு பங்குமாய் தென்னகத்து நிலைமை சீர்கெட்டு நலிவுற்றுக் கிடக்கின்றது.

இந்த வேதனையான தொழில் நிலைமையால் துணி விற்பனைக்கேற்ற சந்தையாய் திராவிடம் வாடவும், கொள்ளை இலாபத்தால் வடநாடு கொழுக்கவுமான நிலைமை உருவாகியுள்ளது. தென்னகம் வேட்டைக் காடாய் நலிய, வரிப் புலியாய் வடநாடு பேராதிக்கம் செலுத்துகின்றது.

இந்தியத் துணைக்கண்ட அடிப்படையில் பருத்தி ஆலைத் தொழிலின் நிலைமை இவ்வாறு பயங்கரமாய் இருக்கின்றது. பம்பாய் ராஜ்யத்தையும், சென்னை மாநிலத்தையும் மட்டிலும் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒப்பிட்டு ஆராய்ந்தால் வெந்த புண்ணில் மென்மேலும் வேல் பாய்வதால் ஏற்படும் வேதனை விளைவதைக் காணலாம்.

[தொடர்ச்சி பக்கம்—10]

| இடம் | நூற்பு ஆலைகள் | கூட்டு ஆலைகள் | கதிர்கள் | தறிகள் |
|---|---|---|---|---|
| ஆமதாபாத் நகரம் | 4 | 63 | 20,36,408 | 41.642 |
| பம்பாய் நகரம் | 5 | 58 | 31,05,448 | 63,188 |
| இதர பம்பாய் பகுதி | 12 | 38 | 12,57,244 | 23,483 |
| சௌராஷ்டிரம் | 1 | 9 | 1,69,480 | 3,637 |
| கட்சு | 1 | — | 5.312 | — |
| மத்திய பாரத் | 1 | 15 | 4,36,410 | 10,971 |
| போபால் | — | 1 | 14,876 | 400 |
| ஆஜ்மீர் | — | 4 | 66,312 | 1,738 |
| ராஜஸ்தான் | 2 | 5 | 96,068 | 1,719 |
| பெப்சு | — | 1 | 26,560 | 530 |
| பஞ்சாப் | 2 | 2 | 52,572 | 853 |
| டெல்லி | — | 3 | 1,56,532 | 3,442 |
| உத்திரப் பிரதேசம் | 6 | 17 | 7,70,792 | 13,590 |
| பீகார் | — | 2 | 28.468 | 745 |
| மேற்கு வங்காளம் | 10 | 17 | 5,07,429 | 9,115 |
| ஒரிஸ்ஸா | 1 | 1 | 51,472 | 864 |
| மத்தியப் பிரதேசம் | — | 11 | 3,74.130 | 7,394 |
| ஐதராபாத் | — | 6 | 1,58,080 | 3,164 |
| சென்னை | 59 | 26 | 22,12,264 | 8.523 |
| மைசூர் | 2 | 7 | 2,43,436 | 3,097 |
| கேரளம் | 8 | 2 | 1,40,412 | 717 |
| ஆந்திரா | 7 | — | 60,380 | — |
| புதுச்சேரி | — | 3 | 81,124 | 2,089 |
| ஆக மொத்தம் | 121 | 291 | 1,20,51,209 | 2,02,901 |

## ஏன்?

'ஆகாஷ்வாணி'க்கு ஆலவட்டம் சுற்றும் அக்கிரமம் கண்டு தமிழினமே கொதித்து எழுந்திருக்கும் நேரம் இது!

தமிழை வெறுத்த வானொலி நிலையத்தை, வெறுத்து ஒதுக்கினர், பேச்சாளர்கள், நடிகர்கள், இசைவாணர்கள், மற்றும் கலைத் துறையில் ஈடுபட்ட எண்ணற்றவர்கள்!

ஆமாம்; 'ஆகாஷ்வாணி'யை அவமதித்தனர்! அதே நேரம் மூத்தகுடி மொழியாம் தமிழின் மானத்தையும் காத்தனர்!

ஆனாலும், சமீபத்தில் 'தூய' தமிழ்க் குரல் ஒன்று சென்னை வானொலியிலே-இல்லை; இல்லை; ஆகாஷ்வாணியிலே ஒலித்தது!

கணீர் என்ற குரலில் கவின்மிகு தமிழோசை கேட்டு வியந்தவர்கள் ஏராளம்!

"மேடை என்ற சொல்லை 'அவை' அல்லது 'மன்றம்' என்று சுவையான தமிழில் அழைக்கலாமே!

"பேசும் திறன் பெற்றோர், பண்பும் உடையவராயின் எப்பகையையும் அழித்து விடுவார்களே!"

—இப்படியெல்லாம் அமுதத் தமிழில் அறிவுரைகள் தந்தார், அவர்!

சாதாரணமானவரல்ல!

தமிழ் மாதாவின் தவப் புதல்வர்!

தமிழ் காக்க வந்த பெருந்தகையாளர்!

தமிழரசு காணப் பாடுபடும் ஒரே ஒரு தனிப்பெருந் தலைவர்!

—இப்படி யெல்லாம் 'புகழாரம்' சூட்டப்படுகிறவர்-ஒருநாள் பொன் விழா நடத்தியும் பாராட்டப்பட்டவர்-அவர்தான் சென்னை வானொலியிலே பேசினார், சென்ற 28-4-59 அன்று, இரவு 7-30 மணிக்கு, "மேடைப் பேச்சு" என்ற தலைப்பில்!

யார் அவர்?

தமிழரசுக் கழகத்தின் தனிப் பெருந் தலைவராம்—

**ம. பொ. சி.!**

பேசலாமா?

வெல்லமென இனிக்கும் நல்ல தமிழ்ச் சொல்லாம் 'வானொலி' இருக்க, சாக்கடையில் தேடிப் பிடித்துத் தூக்கி வருகிறாயே 'ஆகாஷ்வாணி'யை—என்று சீறி எழுந்து தமிழ் மானம் மறந்த துரோக சக்தியை காலுக்கடியிலே வீசி எறிந்துவிட்ட தமிழினத்தோருக்கு மத்தியிலே இவர் மட்டும் பேசலாமா?

வானொலி நிலையத்தை நோக்கி ஓடியிருக்கலாமா?

அங்கு தன் வாயைத் திறந்திருக்கலாமா?

நல்ல தமிழ்க் குரலை எழுப்பியிருக்கலாமா?

கூடாது! கூடாது!! கூடாது!!!

ஆனாலும், அந்தோ...அவமானமே! நம் செவிகள் செவிடாகவில்லையே—ம. பொ. சி. பேசியிருக்கிறாரே....

**ஏன்?...ஏன்?**

# ரோமாபுரிப் பாண்டியன்



மு. கருணாநிதி

## அறிமுகம்

மாவீரன் பாம்பே — மாவீரர்களை மண்டியிட வைத்த சீசர்—சீசர் வளர்த்த சிங்கம் அந்தணி—அந்தணியை அடக்கிய அகஸ்டஸ்—இப்படி வீரத் திருவிளக்குகளின் ஒளி மழையால் எழில் கொண்டு விளங்கிய பூமி ரோமாபுரி!

அது வாழ்ந்த விதமும், தாழ்ந்த கதையும் யாரும் அறியாத ரகசியமல்ல. ரசவல்லிகளின் மைவிழிகள்—மதுக் கிண்ணங்கள் — இவைகளே அந்தத் திருநாட்டின் பெரு வீழ்ச்சிக்குக் காரணமென்ற விளக்கத்தை வரலாறு புலம்பிக் காட்டுகிறது. ஏற்றமும் பொலிவும் குலுங்க என்றைக்கோ ஒருநாள் மலையில் ஏற்றிவைத்த தீபம்போல் அந்தச் சின்னஞ்சிறு சிங்காரப் பொன்னாடு எட்டுத் திக்கும் புகழ் பரப்பிக் கொண்டிருந்தது. அதன் மெருகு குலைந்து அடித்தளமும் ஆட்டங் கொடுத்துப் புழுதியில் வீசப்பட்ட வீணையென ஆகிவிட்ட காலத்தை கி. பி. 1453 என்று கணக்கிட்டுக் கூறுவார்கள், சரித்திர ஆசிரியர்கள்.

ரோமானியப் பேரரசை உலகுக்கு முதன் முதல் அறிமுகப்படுத்திய பெருமை, யாருக்கு உரியதாக இருந்தாலும், அந்தப் பிஞ்சுக் குழந்தையைப் பெற்றெடுத்த கௌரவம் முழுமையும் 'ரோமுலஸ்' என்பவனையே சாரும்.

கி. மு. 753-ல் இத்தாலியிலே லத்தீன் மொழி பேசிக் கொண்டு ஒரு கூட்டம் நுழைந்தது. அந்தக் கூட்டத்தினர் 'டைபர்' ஆற்றங்கரையில் சிறு நகர் ஒன்றைத் தோற்றுவித்தார்கள். நகரைச் சுற்றி ஏழு குன்றுகள்—நடுவிலே நகரம்! நகரை அமைத்த கூட்டத்தின் தலைவன்தான் ரோமுலஸ்! அவன் பெயரே அந்த நகருக்கு வழங்கலாயிற்று.

பற்பல ஆபத்துக்களைச் சந்தித்து ரோமாபுரி உலகத்தின் கண்ணெதிரே நிமிர்ந்து நிற்க வேண்டுமென்று நெஞ்சை உயர்த்திக் கொஞ்சங் கொஞ்சமாக எழுந்தது. அந்த எழுச்சிக்கு ஊக்கமளித்தவர்கள்தான் உரம் வாய்ந்த பெருவீரர்களான பாம்பே, சீசர், அந்தணி, அகஸ்டஸ் போன்றவர்கள்!

பாம்பேயின் தலையை எகிப்துக் கடற்கரையின் மணல்மீது நறுக்கிப் போட்டனர் — ஆனால் அதே மணல் வெளியில் சீசரின் மடியில் தலைவைத்து இன்ப சுகம் அனுபவித்தாள் பேரழகி கிளியோபாத்ரா! இது நடந்தது ஏறத்தாழ கி. மு. 48—ல்! அந்தச் சீசரைப் பாம்பேயின் சிலையருகே குத்திக் கொன்றனர் ரோமாபுரிப் பெருந்தகையினர் சிலர்! அதன் பின்னர் அந்தணிக்குச் சொந்தமானாள் எகிப்தின் அழகு ராணி கிளியோபாத்ரா. சீசரின் வளர்ப்பு மகன் ஆக்டேவியசுக்கு ரோமாபுரியைத் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வர வேண்டுமென்ற ஆசை வளரத் தொடங்கிற்று. அதன் விளைவாக ரோம் நாட்டுப் பாராளு மன்றத்தினர் அந்தணியை விரோதியென்று விளம்பரப்படுத்தினர்.

போர்க்கொடி ரத்தச் சாயத்துடன் விண்ணை எட்டியது! இரு பெருந்நீரர்களும் ரணகளத்தில் இறங்கினர். போகக் களத்தில் புரண்டுக் கொண்டிருந்த அந்தணிக்குப் போர்க்களம் உற்சாகம் வழங்கவில்லை. புறமுதுகிட்டுத் திரும்பினான். ரோமாபுரியின் முதலாவது மன்னர் மன்னனாக மணிமகுடம் அணிந்து கொண்டான் ஆக்டேவியஸ்! "மகிமை பொருந்திய மகாவீரன்" என்ற வீர வாசகத்தின் சுருக்கமான பெயராக "அகஸ்டஸ்" என்ற பட்டத்தை ரோமாபுரிப் பாராளுமன்றம் ஆக்டேவியசுக்குப் பூரிப்போடு சூட்டி மகிழ்ந்தது.

**அகஸ்டஸ் சீசர் அரிமாவென நின்று ஆர்ப்பரித்தான் - அந்தணியோ அந்தப்புரத்தில் சுருண்டு கிடந்தான். இந்த நிலைக்குரிய காலம் ஏறத்தாழ கி. மு. 30 என்று கூறலாம்!**

அந்தக் காலத்திலேதான் நமது பழம் பெருந் தமிழகத்தில் முப்பேரரசுகளின் கொடி நிழலில் கொற்றம் தழைத்துக் கொண்டிருந்தது எனவும், சோழ மண்டிலத்தில் திருமாவளவன இரண்டாம் கரிகாற் பெருவளத்தான் ஆண்டுகொண்டிருந்தான் எனவும் வரலாற்றுப் பெரியவர்கள் வரையறுத்துள்ளார்கள். இந்தக் கரிகாலனின் காலம் கி. மு. 60-முதல். கி. மு. 10-வரை என்பதாகத் தமிழ்ச் சான்றோர் குறிப்பிடுகின்றனர்.

ரோமாபுரியிலே கோலோச்சிய அகஸ்டஸ் சீசரின்பால் பாண்டிய மன்னன் தனது தூதுவரை அனுப்பியிருந்தான் என்றும்; அது கி. மு. 20 என்றும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

அங்ஙனமாயின் அந்தத் தூதுவரை ரோமாபுரி அகஸ்டஸ் மன்னனிடம் அனுப்பி வைத்த பாண்டிய அரசன் யார்?

இந்தக் கேள்விக்கு விடையினைக் கூறுவோர் பலவிதக் குழப்பங்களையேபதிலாகத் தந்திருக்கின்றனர் இதுவரையில்!

கரிகால் பெருவளத்தானுக்கு, "குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவன்" என்ற ஒரு பெயருமுண்டு. இந்தப் பெயர் அவன் மறைந்த பிறகு இடப்பட்டதாகும். இவன் 'திருவிடைக்கழி' அல்லது 'குராப்பள்ளி' என்னும் இடத்தில் உயிர் நீத்ததால் அப்பெயர் பெற்றான். இவனைப் பற்றிய புறப்பாட்டு ஒன்றைப் பாடிய காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் எனும் புலவர் அந்தப் பாட்டில் பாண்டிய மன்னன் ஒருவனையும் இணைத்துப் பாடியிருக்கிறார். அந்த மன்னனின் பெயர் பெருவழுதி. இவன் "வெள்ளியம்பலத் துஞ்சிய பெருவழுதி" யென்று அழைக்கப்பட்டான்; மறைந்த பிறகு!





[தென்னகத்தில் குவியல் குவியலாகக் கிடைத்தரோமாபுரி நாணயங்களின் படம் இது. அகஸ்டஸ், டைபீரியஸ், ட்ராஜன், க்ளாடியஸ்—ஆகியோரது காலத்தவை]

"நீ அறம் தங்கும் உறையூரின்கண் அரசன்; இவனே தமிழ் குலுங்கும் மதுரையில் குளிர்ந்த செங்கோலையுடைய வேந்தன்! நீ, தண்புனல் காவிரிக்கு உரியவன்; இவனே போரின்கண் மாட்சிமைப் பட்ட பாண்டியர் குடியில் ஏறு போன்றவன்! பொதிகை மலைச் சந்தனமும் திரை கடல் முத்தும் மும்முரசமும் கொண்டவன்! நீங்கள் இரு பெருந் தெய்வங்கள் ஒருங்கு நின்றார்போல் காட்சி தருகின்றீர்! இன்றுபோல் என்றும் நிலைத்திடுக நுமது நட்பு! வென்று வென்று போர்க்களத்தில் மேம்படுக உமது வேல்! புலி, கயல் பொறித்து உம் வெற்றியைப் பிறநாட்டுக் குன்றுகளில் சேதுக்கிடுவீராக!"

புறம் ஐம்பத்தெட்டாவது பாடலில் இந்த அழகிய கருத்தினைத் தந்து காரிக்கண்ணனார், சோழன் கரிகாலனையும், பாண்டியன் பெருவழுதியையும் ஒருசேர வாழ்த்துகிறார்.

இதனைக் கொண்டு கரிகாலன் காலத்துப் பாண்டியன் பெருவழுதியென்று முடிவு கட்டுகிறோம். கரிகாலன், காலமோ கி. மு. 60 முதல் கி. மு. 10 வரையில்!

அந்தக் காலத்திலேதான் ரோமாபுரியில் அகஸ்டஸ் சீசர் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்திருக்கிறான். அதாவது கி. மு. 39 முதல் கி. பி. 14 வரையில்!

இந்தக் காலக் கணக்கை ஆராய்வதிலிருந்து அகஸ்டஸ் சீசருடன் நட்புறவு கொண்டு தூதுவரை அனுப்பிவைத்த பாண்டியன் பெருவழுதியாகத்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கே நாம் வரவேண்டியவர்களாகிறோம்.

ரோமாபுரிக்கும், தென்னகத்திற்கும் இந்தக் காலத்திற்கு முன்பே வாணிபத் தொடர்புகள் ஏற்பட்டு இரு நாட்டுக்காரர்களும் அளவளாவி மகிழ்ந்தனர். கரிகாலனும், பெருவழுதிப் பாண்டியனும் மகுடம் புனைந்த பிறகு ரோமாபுரித் தொடர்பு வேகமாகத் தழைத்து வளரலாயிற்று. அகஸ்டஸ் சீசர் காலத்தில் ஓங்கி யெழுந்த அந்த உறவு பல ஆண்டு காலம் நீடித்தது. நீரோ மன்னனின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகுதான் அந்த உறவு சிறிது சிறிதாகத் தேய்ந்து மாய்ந்தது என்று கூறலாம்.

தமிழகமும், ரோமும் கொண்டிருந்த தொடர்புகளுக்குச் சான்று பகரும் வகையில் புதை பொருள் ஆராய்ச்சிகள் துணை நிற்கின்றன!

கிரேக்கரையும் ரோமானியரையும் யவனர்கள் என்ற பெயரால் அழைத்து அந்த யவனர்களைத் தங்கள் அரண்மனைகளில் காவல் வீரர்களாக வைத்திருந்தனர் தமிழ் மன்னர்கள் என்பதற்கு இலக்கியங்கள் சாட்சி கூறுகின்றன. "கடிமதில் வாயிற் காவலிற் சிறந்த — அடல்வாள் யவனர்" என்ற சிலப்பதிகாரப் பாட்டு தக்க எடுத்துக் காட்டாகும்.

நக்கீரனார் பாடிய ஐம்பத்தாறுவது புறப்பாட்டில், "யவனர், நன்கலர் தந்த தண்கமழ் தேறல்" எனக் காணும் வரி, யவனர்கள் தமிழகத்தில் மது வகைகளைக் கொணர்ந்து விற்று வந்தனர் என்பதை உணர்த்துவதாகும்.

தென்னகத்திலிருந்து ரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களில் மிக முக்கியமானது மிளகு! அலாரிக் என்பவன் ஒரு காலத்தில் ரோமை வெற்றி கண்டபோது நஷ்ட ஈட்டுத் தொகையில் மூவாயிரம் பவுண்டு தமிழ்நாட்டு மிளகும் தர வேண்டுமென்று உடன்படிக்கை செய்து கொண்டானாம்.

முசிரிக்குத் தெற்காக இருக்கும் குளச்சல் என்னுமிடத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் மூழ்கி எடுத்த முத்துக்களும் ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

டாலமி என்பவன், ரோமுடன் தொடர்பு கொண்டிருந்த தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் ஒன்றாக "காபெரிஸ்" துறைமுகம் என்ற ஒரு பெயரையும் எழுதிக் காட்டுகிறான். காவிரிப்பூம்பட்டினத்தையே அவ்வாறு அழைத்திருக்கக் கூடுமெனக் கூறுவர் அறிஞர். அவன், "புடோக்கி" என்று ஒரு துறைமுகத்தைக் குறிப்பிடுகிறான். அது அநேகமாகப் புதுவையாக இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். பாண்டி நாட்டுக் கொற்கைப் பெருந்துறைக் கருகாமையில் முத்துக்களும், சங்குகளும் மிக அதிகமாகக் கிடைத்து, அவைகள் உலகில் எல்லாப் பகுதியினராலும் பாராட்டப் பெற்றன.

கொற்கை முத்துக்கு ஈடு இணையில்லை யென்பதை,

"மறப்போர்ப் பாண்டியர்
அறத்திற் காக்கும்
கொற்கையம் பெருந்துறை
முத்து"

—என்ற அகப்பாட்டு அழகுற விளக்குகிறது.

முத்தும், நுண்ணிய பருத்தி ஆடைகளும், எலி மயிராலும், பட்டாலும் நெய்யப்பட்ட உடைகளும், ரோமாபுரி போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து குதிரைகளும், மதுவகைகளும், கண்ணாடிச் சாமான்களும் கொற்கைப் பெருந்துறையில் வந்து இறங்கிய வண்ணமிருந்தன.

அழகான கப்பல்களில் தங்கத்தை ஏற்றிக் கொண்டு யவனர்கள் வருவார்களாம். பிறகு மிளகை ஏற்றிக் கொண்டு திரும்புவார்களாம். முசிரித் துறை முழுவதும் அந்தக் கப்பல்களின் பேரொலி கேட்கும் என்று சங்க இலக்கியங்கள் பெருமை பேசுகின்றன.

புகார் துறைமுகத்தில் எல்லா நாடுகளைச் சேர்ந்த வணிகர்களும் மாலுமிகளும் வந்திறங்குவார்கள்; அவர்கள் எல்லாரும் ஒரே இனத்தவர்போல ஒற்றுமையாகப் பழகி வாழ்வார்கள்— என்று தமிழிலக்கியம் கூறுகிறது. யவனர்கள் பலர் தமிழ் மன்னர்களின் மெய்காப்பாளர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்ற செய்தி யொன்றே இருசாராரிடையிருந்த நல்லெண்ணத்தை விளக்கும் கண்ணாடியாகும்.

இத்தகைய தொடர்புகளை இன்று மெய்ப்பித்துக் காட்டுவது போல புதுவை மாநகருக்குப் பக்கத்திலே "அரிக்க மேடு" என்னுமிடத்தில் நடைபெற்ற ஆராய்ச்சியில் ரோமானியருக்குரிய பலவகைப் பொருள்கள், கண்டெடுக்கப் பட்டிருக்கின்றன. அவர்கள் உபயோகித்த பாத்திரங்கள், விளக்குகள், நாணயங்கள் போன்ற பலவற்றைத் தமிழகத்திலே காணமுடிகிறது. அரிக்க மேட்டில் சில சிறுவர்கள் அகஸ்டஸ் சீசரின் உருவம் பதிக்கப்பட்ட ஒரு விலை உயர்ந்த கல்லைக் கண்டெடுத்தனர். ஆனால் அது இப்போது காணமல் போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது.

ரோம் நாட்டுத் தங்க நாணயங்கள் இந்தியா, பாகிஸ்தான் உட்பட அறுபத்தெட்டு இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டன. அந்த அறுபத்தெட்டு இடங்களில் ஐம்பத்தேழு இடங்கள் விந்தியத்திற்குத் தெற்கே இருக்கின்றன என்பதைக் கேட்கும்போது ரோமுக்கும் தென்னகத்திற்கும் இருந்த வந்த பழைய தொடர்பை எண்ணி எண்ணிப் பெருமூச்செறிகிறோம் நாம்.


அந்த நாணயங்கள் பெரும்பாலானவை அகஸ்டஸ் காலத்ததும், டைபீரியஸ் என்பவனின் காலத்ததுந்தான்! நீரோ காலத்து நாணயங்கள் அவனைப் போலவே தரக் குறைவாகவும் தங்கத்துடன் வெள்ளி கலந்ததாகவும் காணப்படுகின்றன. ரோம் பாராளு மன்றத்தில் பேசிய டைபீரியஸ், வெளி நாடுகளுக்கு ரோம் நாட்டுப் பணம் போவதைக் கண்டித்துப் பேசினான் என்று சரித்திரம் செப்புகிறது.

கோவை மாவட்டத்திலே குவியல் குவியலாக ரோமர் நாணயங்கள் கிடைப்பதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தார்கள். கிழக்குக் கடற்கரையிலிருந்து ரோமாபுரிக்கு மேற்கு கடற்கரை வழியாகப் பொருள்களை அனுப்ப வேண்டுமானால் ஒன்று கன்யாகுமரியைச் சுற்றிக் கொண்டு போகவேண்டும் — அல்லது கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்கு தொடர்ச்சி மலையும் சந்தித்து வழி விட்டிருக்கும் குறுக்குப் பாதை வழியாகத்தான் செல்ல வேண்டும் இன்று அதிக அளவில் அந்தப் பகுதியில் காணப்படும் நாணயக்குவியல்களுக்கு, அதையும் ஒரு காரணம் காட்டுவோரும் உளர்!

எப்படியோ தமிழகமும் ரோமும் எல்லாவகையிலும் உறவாடி யிருக்கக்கூடும் என்பதற்கான சான்றுகள், புதைபொருள் ஆராய்ச்சி மூலமும்— இலக்கியங்கள் வாயிலாகவும்— வரலாற்றிலிருந்தும் வெகுவாகக் கிடைத்திருக்கின்றன.

இந்தப் பழைய தொடர்பினை மையமாக வைத்துத்தான் "ரோமாபுரிப் பாண்டியனை" உருவாக்கிடத் துணிவு பெற்றுள்ளேன். இந்த முன்னுரையிலே உங்கள் மேலான நினைவிலே நிறுத்திய கொள்ள வேண்டிய முக்கிய குறிப்புக்கள்:

**அகஸ்டஸ் சீசர் காலம் கி. மு. 39 முதல் கி. பி. 14 வரை! கரிகாலன் காலம் கி. மு. 60 முதல் கி. மு. 10 வரை! பாண்டியன் பெருவழுதி கரிகாலனின் நண்பன் மட்டுமல்ல; ரோமுடன் நட்பு கொண்டிருந்தவன். தூதரை அனுப்பியவன்.**



ரோமானியக் கலையழகுடன் பொருள்கள் கிடைத்த புதுவைக்கு அருகிலுள்ள "அரிக்கமேடு" இதுதான்!

அகஸ்டசும் அந்தணியும் போர்க்களத்திலே சந்தித்துத் திரும்பியிருக்கிறார்கள்! அந்தணியின் முடிவு இன்னும் சொல்லப்படவில்லை! கிளியோபாத்ராவின் சோக முடிவினையும் எழுதிடவில்லை! நமது கற்பனைக் கதாநாயகி எங்கிருந்து வரப்போகிறாள் என்பதும் அறிவிக்கப்படவில்லை! அவள் கற்பனைக் கதாநாயகிதானா? அல்லது சரித்திர நூலின்

[தொடர்ச்சி பக்கம்—12]


விரைவில் வருகிறது!
மாடர்ன் தியேட்டர்ஸ்
தலை கொடுத்தான் தம்பி
டைரக்ஷன்
டி.ஆர்.சுந்தரம்
கதை-வசனம்
முரசொலி மாறன்.எம்.ஏ
சங்கீதம்
விஸ்வநாதன், ராமமூர்த்தி




# மேன்மைமிகு தினசரிகளே; மேயவேண்டாம் நுனிப்புல்!

எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்தார்கள்!

எதிர்க்கட்சிக்கு எதிர்ப்புத் தரவில்லை!

மறைமுகப் போட்டிகூட இல்லை! மக்கள் குரலுக்கு மதிப்பளித்தார்கள்!

'ஆகவே, 'அவர்கள்' (விலகி வழி விட்டு) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அ. பொ. அரசு என்பவரை மேயர் அமரும் மஞ்சத்திற்கு அழைத்துச் சென்றார்கள்!

—இப்படி 'அவர்களுக்கு'— (இந்திய தேசியக் காங்கிரசாருக்கு)—'பாரதம் பாரதம்' என் 'யூனியன் கீதம்' பாடுவோருக்கு-- அகில இந்திய ஆலாபனை செய்வோருக்கு நற்சாட்சிப் பத்திரங்களை அள்ளி அள்ளித் தந்திருக்கிறது. 'நாட்டைத் துண்டு போடும்' நாம்—தமிழர் இயக்கத்தை ஆதரிக்கும் பத்திரிக்கையாம் தினத்தந்தி!

எதிர்காலத்தைப் பற்றிச் சிறிதும் நினையாது, விடாப்பிடியாக செந்தமிழ் முழங்கும் 'தமிழகத்'தைச் 'சென்னை'யாகவே வைத்திருப்பவர்களுக்கு — 'வானொலி' என்ற அழகு தமிழ்ச் சொல்லிருக்க, 'ஆகாஷ்வாணி' என்ற வடக்கத்திப் பெயரை தமிழக வானொலிக்கு இட்டிருக்கும் இழி[illegible]தவருக்கு—

[illegible]கட்சி இளைஞர்களின் [illegible]ப் பிடுங்கித் தின்று [illegible]ம் 'அரசியல் ஓநாய்' [illegible]

[illegible]ல் முக்காடிட்டு, [illegible]பிரகாஷ் ஓட்டல்களில் [illegible] கத்தைகளின்மேல் அமர்ந்து கொண்டு சதித் திட்டம் தீட்டியோருக்கு—

ஒரு பெரும்பான்மைக் கட்சியாக தி. மு. க. வந்தும், அதற்கெதிராக போட்டியை ஏற்படுத்தி 45 ஓட்டுகள் வாங்கவைத்தவர்களுக்கு பாராட்டிதழ் படித்து வழங்குகிறது தினத்தந்தி.

இதோ அந்தப் பாராட்டிதழின் ஒருபகுதி!

"...தி. மு. கழகத்தைச் சேர்ந்த அ. பொ. அரசு எதிர்ப்பு இல்லாமல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பது. ஒரு நல்ல அறிகுறியாகும். கட்சி வேறுபாடுகளை விலக்கி — கருத்து மாறுபாடுகளை மறந்து — நகரத்தின் முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எல்லோரும் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை இதன் வாயிலாக முளை விடுகிறது. இந்த நம்பிக்கைக்கு இடமளித்தவர்கள் காங்கிரசார்தான்...."

(தினத்தந்தி—1—5—59)

—போட்டியின்றித் தேர்ந்தெடுத்ததால் நகரத்தின் நன்மைக்காகவும் பாடுபடுவார்கள் காங்கிரசார் — என்று நம்புகிறது தினத்தந்தி!

தலையங்கத்தில் இந்த நம்பிக்கையைத் தெரிவித்ததற்கு நன்றியையும், தலையங்கத்தில் காணப்படும் 'தெளிவில்லாத் தன்மைக்கு' அறிவுரையையும், தலையங்கத்தில் நிகழ்ந்த இந்தத் தவறால் நிகழும் 'அரசியல் விளைவை' நினைத்து கண்டனத்தையும் அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

மாநகராட்சியின் மரபை அறியாது தவறான முடிவுக்கு வந்திருக்கிறது, தினத்தந்தி!

அரசு போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதை அது முதன் முதலில் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அதிகாரப்பூர்வமற்ற தேர்தல், அதிகாரப் பூர்வமான தேர்தல் என இருவகையுண்டு என்பதையும் கேட்டாவது அது தெரிந்து கொண்டிருக்கவேண்டும்.

அதிகாரப் பூர்வமற்ற தேர்தலில் எல்லோரும் தனியறையில் தனியாகக் கூடிப் பேசுவார்கள். போட்டியிருப்பின் அங்கு போட்டியிடவேண்டும்.

பிறகு, முடிவு தெரிந்ததும் அதிகாரப் பூர்வமான தேர்தல் நடக்கும். இங்கு, முன்பு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவதாக அறிவிக்கப்படுவார்கள்.

இந்தமுறையும், அதிகாரப் பூர்வமற்ற தேர்தலில் தோழர் அரசுக்குப் போட்டியிருந்தது. பெரும்பான்மைக் கட்சியாக வந்த தி. மு. கழகத்திற்கு வழி விடும் விரிந்த மனப்பான்மை இல்லாத காரணத்தால் மேயர் தேர்தலுக்கு ஒரு பி. சோ. அபேட்சகரைத் தேர்ந்தெடுத்து நிற்க வைத்தது காங்கிரஸ்! அந்த பி. சோ. அபேட்சகருக்கு தினத்தந்தியில் பாராட்டப்படும் காங்கிரஸ்காரர்களும் பி. சோ. கட்சிக்காரர் ஒருவரும். சோஷலிஸ்டுக் கட்சிக்காரர் ஒருவரும், சுயேச்சைகளில் பலரும் ஆதரித்து ஓட்டுப் போட்டதில், அவருக்கு 45 ஓட்டுகள் கிடைத்தன. திராவிட முன்னேற்றக் கழகத்தவராம் அரசுவுக்கு 50 ஓட்டுகள் கிடைத்தன. பின்னர், அரசு மேயர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டார்!

பிறகு அதிகாரப் பூர்வமான தேர்தலில் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு, நகராட்சி மன்றத்தின் செங்கோலைக் கையிலேந்தினர் அரசு!

இது நடந்தது! ஆனால் தினத்தந்தி போட்டியின்றி அரசு தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்துப் பின் காங்கிரசை வாழ்த்துகிறது!

போட்டியின்றித் தேர்தல் நடைபெறவில்லை.

எனவே, காங்கிரஸ் பாராட்டுக்குரியதுமன்று!

கழகத்திற்கு வழிவிட்டு, அதிகாரப் பூர்வமற்ற தேர்தலிலும் ஆதரித்திருக்குமென்றால் காங்கிரசுக்கு இந்தப் பாராட்டுதல் பொருந்தியிருக்கும்.

ஆக, அரசியலில் நுனிப்புல் மேய்ந்துவிட்டு இல்லாத பண்பிற்காக காங்கிரசுக்கு நற்சாட்சிப் பத்திரம் தருவது, மக்கள் மத்தியில் தவறான பிரச்சாரத்தையே பரப்பும்!

தினத்தந்திதான் என்றில்லை, மற்றைய நாளிதழ்களில் கூட சில 'போட்டியின்றித் தேர்வு' என்ற பிரச்சாரத்தை நடத்தியிருக்கின்றன, நகராட்சித் தேர்தல் முடிந்தும் முடியாததுமாக!

நகர மக்கள் அப்போது மிகவும் குழம்பிப் போயிருந்தனர். எந்தச் செய்தி சரி, எந்தச்செய்தி தவறு என்கிற தர்க்கவாதத்திலே இறங்கி அரசியல் கட்சிகளைப் பற்றிய தவறான கணிப்பிற்கு அவர்கள் தங்களைத் தாங்களே இழுத்துச் சென்று கொண்டிருந்தனர்.

ஆக, தினத்தாள்களும், வாரத்தாள்களும் முடிந்தவரை வளர்கின்ற எதிர்க்கட்சிகளுக்கு சம்பந்தப்பட்ட உண்மைச் செய்திகளை திரித்தோ, தவறாகவோ, வெளியிடாமல் நன்முறையில் வெளியிடவேண்டும். அப்போதே ஜனநாயகப் பயிர், இந்நாட்டில் செழித்து வளரும்.

செய்திகளை வெளியிட்டதோடு நின்று விடாது, நாங்கள் செய்ய வேண்டியவைகளை எடுத்துக் காட்டுகின்ற பணியையும் புரிய வேண்டும்.

பத்திரிகைகளின் ஆலோசனைகள் ஜனநாயகத்திற்கு நலம் விளைவிப்பவை என்பதை உணர்ந்தவர்கள், தி. மு. கழகத்தவர்! எனவே, அறிஞர் அண்ணா பத்திரிகைகளுக்குச் சொன்னது போல்,

"நீங்கள் தைரியமாக மனதில் பட்டதை கள்ளம் கபடம் இல்லாமல், உள்ளத்தைத் திறந்து காட்டுங்கள். நாங்கள் என்ன செய்ய வேண்டும், எங்கள் குறைகள் என்னென்ன என்பனவற்றைத் தலையங்கம் மூலமாகவோ — தலையங்கம் எழுதும் அளவிற்குத் தகுதி படைத்தவர்களா என்று கருதினால் பத்திரிகைக் கடிதம் மூலமாகவோ யோசனைகள் மூலமாகவோ எங்களுக்குத் தெரிவியுங்கள்' என்று கூறுகிறோம்.

அதோடு, செய்திகளைச் சிதைக்காதீர்கள்; திரித்துக் கூறாதீர்கள்; தவறான எண்ணத்தை மக்களிடையே ஏற்படுத்தாதீர்கள்; உண்மைக்கு மாறான செய்திகளை ஆதாரமாகக் கொண்டு ஒரு அரசியல் கட்சியின் வரலாற்றை மறைக்க முயலாதீர்கள் என்னும் எச்சரிக்கையை பத்திரிகை உலகிற்குத் தரவேண்டியவர்களாகவும் இருக்கிறோம்!

எதிர்க்கட்சிகளின் சாதனைகளை மறைத்துப் போடும் 'இருட்டடிப்புக் கலை'யில் கைதேர்ந்த ஏடுகள் பலவற்றைத்தான் நாம் கண்டிருக்கிறோம். ஆனால் கட்சியின் கண்ணியமற்ற தன்மையையும் அவைகளால் மறைக்கமுடியும் என்பதையும் இப்போது உணர்கிறோம்.

ஐயோ! இருட்டடிப்பே! இந்த நாட்டில் உனக்குத்தான் 'பத்திரிகா தர்மம்' என்ற பெயரா? ஃ


## அழகிய படம்!

## எடுப்பான தோற்றம்!

காஞ்சி தந்த கருவூலம்—அறிஞர் அண்ணா அவர்கள் வடநாடு சென்றபொழுது ஆங்கில உடையில் அழகாக எடுத்த எழில்மிகு படம்; தென்னகம் இதுவரை கண்டிராத புதுமையான படம்; திருச்சி நாதன் அன் கம்பெனியார் வெளியிட்டது!


**100 விலை 65 ரூபாய்.**

அளவு 20" — 14"

**பீ: ஆர். பிக்சர் பேலஸ்,**

**111, நங்கவரம் ஸ்டோர்ஸ், திருச்சி—2.**

குறிப்பு:— இந்தப் படத்தை வெளியிட்டவரும், அதற்கு உரிமை உடையவருமான திருச்சி நாதன் அன் கம்பெனியார், இந்தப் படத்தை கலரிலோ அல்லது வேறு விதமாகவோ வெளியிடுபவரைக் கண்டித்து அவர்கள்மேல் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.






—————— " மாலுமி " ——————

எஸ். சாரதி; திருநெல்வேலி.

(?) சென்னை கடற்கரையிலே நிற்கிற காந்தியாரின் சிலை அகற்றப்படுமா?

50,000 ரூபாய்களையும், திறப்பு விழாச் செலவில் பல ஆயிரம் ரூபாய்களையும் விழுங்கி ஏப்பமிட்டிருக்கிற அந்த எளிய மனிதரின் சிலை அவ்வளவு சுலபத்தில் அகற்றப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? அதுவுமில்லாமல், அந்த உருவச் சிலை சென்னை நகர சபையில் காங்கிரஸ் தோற்றுவிட்டதின் நினைவுச் சின்னமாகக்கூட இருந்து விட்டுப் போகலாமே! சிலையின் முகத்திலே தெரிகிற 'கடுகடுப்பு' காங்கிரஸ் இயக்கத்தின்பால் அவர் கொண்டிருந்த வெறுப்பின் பிரதிபலிப்பாக இருந்து விட்டுப் போகட்டும் — என்று சிலை வைத்தவர்கள் கருதலாமல்லவா?

ஏ. கோவிந்தன்; சேவல்குளம்.

(?) 'கண்ணீர்த் துளிகள்—45' என்று சென்னை நகரசபைத் தேர்தல் முடிவில் 'கட்சி நிலவரம்' தந்த 'விடுதலை', மேயர் தேர்தலுக்குப் பின் 'தோழர்' அரசு மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்—என்று குறிப்பிட்டதே; ஏன்?

ஆச்சரியப்படக் கூடிய செய்தியல்ல தோழரே இது! 'மகன் அரசு மேயரானான்' என்ற செய்தி பெரியாரின் கையொப்பத்தோடு பிரசுரமாகவில்லையே—என்பதுதான் ஆச்சரியம்! எவ்வளவுதான் மனதை வலுக்கட்டாயமாக இரும்பாக்கிக்கொண்டாலும், இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் சாகாது ஒட்டிக் கொண்டிருக்கும் 'பாசம்' தலை தூக்காமலிருக்குமா? தோட்டத்தை அழிக்க மாடு புகுந்தால் என்ன; ஒரு விதை மிச்சமிருந்தால் மீண்டும் தோட்டம் தோன்றி விடாதா?

ராஜன்; பேரளூர்.

(?) ஊட்டிக்கு அருகிலுள்ள மலைவாழ் மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் அங்கே சட்ட மன்றத்தைக் கூட்டியதாக அமைச்சர் பக்தவத்சலம் ஊட்டியிலே ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறாரே; அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைப்பதுதானே முறை?

வட்டாரத்து மக்களின் வசதிக்காக என்றால், 'மானம் பார்த்த பூமி' என்று அழைக்கப்படுகின்ற வரண்ட இராமநாதபுரம் மாவட்டம் இல்லையா? அதை விடுத்து ஊட்டிதானா அவர்கள் கண்களில் தென்பட வேண்டும்?

ஆனந்தன்; ராமநாதபுரம்.

(?) சட்டசபை ஊட்டிக்குப் போனதால் அந்த வட்டாரத்தில் என்னென்ன நன்மைகள் கிடைத்தன?

அங்கு மந்திரிகள் போன நான்காவது நாள் பஸ் வண்டி கவிழ்ந்து 18 பேர் மரணமடைந்திருக்கின்றனர்!

சாந்தகுமார்; ஓசூர்.

(?) 'கும்பி எரிந்தால் என்ன? குடல் கருகினால் எங்களுக்கு என்ன? நாங்கள் ஊட்டியிலிருந்து கீழே இறங்க மாட்டோம்' என்று கக்கன் கர்ஜித்தாராமே?

ஆமாம்; "கும்பி எரிகிறதா? குடல் கருகுகிறதா? அப்படியானால் புல்லைச் சாப்பிடுங்கள்"—என்று கொக்கரித்து; முடிவிலே புல்லைத் தின்று புல் மூடிப் போனானே; திமிர் பிடித்த பிரெஞ்சுக் கவர்னர் பௌலன்; அவனது வரலாற்றை கனம் அமைச்சர் படித்ததில்லை போலிருக்கிறது!

பி. காந்தி; பெரியகுளம்

(?) காங்கிரஸ் கட்சியின் அடுத்த தலைவர் யார்?

அதுதான் நேருவுக்கு இரு பேரப்பிள்ளைகள் வெள்ளைக்காரன் சீமையில் படித்துக் கொண்டிருக்கிறார்களே!

## மு. கருணாநிதி

## மே மாத நிகழ்ச்சிகள்

✻

9 புள்ளம்பாடி
[உதய சூரியன் நாடகம்]
10 திருச்சி காலை—திருமணம்
மாலை—'உதய சூரியன்'
11 பாலத்தளி
12 காலை—பட்டுக்கோட்டை
மாலை—தொக்காலிக்காடு
14 சென்னை [11-வது வட்டம்]
15 சென்னை [53-வது வட்டம்]
16 நெல்லை மாநாடு
17 "
18 ஏரல்
20 காலை—காட்டூர் திருமணம்
மாலை—ஆனதாண்டவபுரம்
21 கும்பகோணம்
22 திருக்குவளை
["முத்துவேலர்—அஞ்சுகம் மருத்துவமனை" அன்பளிப்பு விழா]
23 ஓய்வு
24 திருவாரூர்
[மேயர் வரவேற்பு]
25 திருச்சி
30 கடலூர்
31 தர்மபுரி — 'உதயசூரியன்'

[ஜூன் திங்களில் குளித்தலைத் தொகுதி சுற்றுப் பயணம் ஏற்பாடாவதால் வேறு ஊர் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கில்லை.]

## ரோமாபுரிப்...

[7—ம் பக்கத் தொடர்ச்சி]

வரிகளில் ஒளிந்துகொண்டு இதுவரை அறிமுகமாகாத ஆரணங்கா? ரோமாபுரிப் பாண்டியன் யார்? இந்த விசித்திரமான தலைப்பு, புரியவைக்கப் போகும் பொருள் என்ன?

இதுவும் புதிராகவே இருக்கிறதல்லவா? இருக்கட்டும்; இருக்கட்டும்! முதலில் ரோமாபுரிக்கும் தமிழகத்துக்குமுள்ள தொடர்புகளும், காலக் குறிப்புகளும், சம கால மன்னர்களின் பெயர்களும் ஐயமின்றித் தெரிந்தால் போதும். அவை தெளிவாகத் தெரிந்துவிட்டன இப்போது! இனி கதையைத் தொடரலாம் அல்லவா?

"முன்னுரையில் ஐயப்பாடு எழுகின்றது—ஆகவே அதனைப் போக்கிவிட்டுக் கதையைத் தொடருக!" என யாரேனும் உடன் அறிவித்தால், அல்லது திருத்தங்கள், வேறு முடிவுகள் தந்தால் அதனைச் சிந்தித்து ஒப்புக் கொள்ளத் தக்கதாயின் அவ்வண்ணமே நடந்திடுவேன் எனவும் பணிவுடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

புலவர் பெரு மக்களும், வரலாற்று ஆசிரியர்களும், மாணவ நண்பர்களும் துணை நிற்க வேண்டுகின்றேன்.

அடுத்த இதழில் இந்தப் பின்னணியில் கதை தொடங்கும்.

அன்பு,


## தயாராகிறது!

பழம் பெருமையுணர்த்திப் புதுப் பரணி பாடச் செய்யும்
எழுச்சி மறவனின் ஏற்றமிகு வரலாறு!

எம். ஜி. ஆர். நாடக மன்றத்தாரின்

புதிய நாடகம்!

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நடிக்கும்




பல்லவ நாட்டுப் படைமுகத்துப் பெருவீரனின் கதை!
கலைஞர் மு. கருணாநிதி எழுதும்
வீரந்துள்ளும் வரலாற்றுக் காவியம்!

பாடல்கள்: கவிஞர்: கண்ணதாசன்
இசை: என். எஸ். பாலகிருஷ்ணன்

தமிழகத்து நாடக மேடைகள் வண்ணப் பொலிவு பெற
எண்ணக் களஞ்சியமாய் -
எழில் நிறைக் கலைக்கருவூலமாய் —
டவனி வரும் திருநாளை விரைவில் எதிர்பாருங்கள்!

எம். ஜி. ஆர். நாடக மன்றம்,
சென்னை—14.


ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.